பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 27 ஞாயிற்றுக்கிழமை 12.01.2025 கதிர் 066

### விமான நிலையத்தில்

# சிறீதரன் மீதான விசாரணை பழிவாங்கும் நடவடிக்கை?

### சந்தேகம் எழுப்புகிறது தமிழ் அரசுக் கட்சி

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாக கண்டித்துள்ள அந்தக் கட்சியின் தலைவர் சிவஞானம் தெரிவித்துள்ளார். இது ஒரு பழிவாங்கும் செயலா என்றும் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் இடம்பெறும் 'எத்திசையும் தமிழணங்கே' என்ற, உலக புலம்பெயர் ☞ 2



## இனி இது ரகசியம் அல்ல!

ரணில் - ராஜபக்ச ஆட்சியில் தரமற்ற மருந்துகளின் கொள்வனவு மற்றும் பயன்பாடுகள் குறித்துப் பெரும் சர்ச்சை நிலவி வந்தது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த நிலையில் மருந்துக் கொள்வனவுக்கே திண்டாடி வந்த ஆளும்தரப்பு பல்வேறு மருந்துகளையும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடம் இருந்து அல்லாமலும் தரநிர்ணய சோதனை இன்றியும் கொள்வனவு செய்திருந்தது என்று மருத்துவர்கள் தொடர்ந்து ☞ 2

## சிகரெட், மதுபான வரிகள் அதிகரிப்பு

### ஜனாதிபதி திடீர் நடவடிக்கை

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, நேற்று சனிக்கிழமை முதல் மதுபானம் மற்றும் சிகரெட் மீதான ☞ 2

### தனது தம்பி செய்த

## மோசடியை ஒப்புக்கொண்ட முன்னாள் அமைச்சர் மனுஷ

தனது பெயரைப் பயன்படுத்தி தனது தம்பி மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்று முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஒப்புக்கொண்டுள்ளார்.

குடும்பத்தினருடன் வெளிநாடு சென்றிருந்த மனுஷ நாடு திரும்பிய பின்னர் நேற்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது இவ்வாறு ஒத்துக்கொண்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராக மனுஷ நாணயக்கார பணியாற்றியபோது, வெளிநாடு ஒன்றில் வேலை பெற்றுத் தாருவார் என்றுகூறிப் பணத்தைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றிவிட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் அவரது தம்பி ☞ 2

## ஜனாதிபதி அநுரவின் சீனப் பயணம் இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும்

### அந்த நாட்டுத் அயலுறவுத்துறை நம்பிக்கை

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீனப் பயணம் இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் நம்பிக்கைய ஆழப்படுத்தும் என்பதோடு இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் என்று சீன அயலுறவுத்துறை அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ஹூவா சுன்யிங் தெரிவித்தார்.

அவர் சீனாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் அழைப்பின் பேரில், ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க சீனாவுக்கு ஜனவரி 14 முதல் 17 வரையில் சீனாவுக்கு வரவுள்ளார். ☞ 2

## 'ஏஐ' தேசிய கொள்கைக்காக மக்களின் கருத்தறிய திட்டம்

செயற்கை நுண்ணறிவு (ஏஐ) குறித்த தேசிய கொள்கையை உருவாக்குவதற்காக பொதுமக்களின் கருத்துக்களை பெறுவதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக டிஜிற்றல் பொருளாதார பிரதியமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்ததாவது: ☞ 2

### பகிடிவதையால் எழுந்த பிரச்சினை காரணமாக

## அ'புரம் பிக்குகள் பல்கலைக்கழகம் நேற்றுடன் இழுத்து மூடப்பட்டது

அனுராதபுரம் பிக்குகள் பல்கலைக்கழகம் இழுத்துமூடப்பட்டுள்ளது. அங்கு கற்கும் பிக்கு மாணவர்கள் சிலர் ஆரம்பித்துள்ள பட்டினிப் போராட்டம் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக உபவேந்தர் அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பிக்கு மாணவர்களும் ☞ 2

## கொழும்பு வைத்தியசாலைக்கு திடீரென மாற்றப்பட்ட துமிந்த

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா சிறைச்சாலை வைத்தியசாலையில் இருந்து மாற்றப்பட்டிருந்தார். அங்கு ஏற்பட்ட சுகவீனம் காரணமாக நேற்று காலை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

நிபுணர் குழுவின் பரிந்துரையின் பேரில் அவர் சிறை மருத்துவமனையில் இருந்து பொது பிரிவுக்கு மாற்றப்பட்டிருந்தார். ஆனால் ஒரே நாளில் அவர் மீண்டும் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சிறையில் துமிந்தவுக்கு சிறப்புக் கவனிப்பு வழங்கப்படுவதாக ஊடகங்களில் சர்ச்சைகள் எழுந்தைத் தொடர்ந்து, அவருக்கு உடல்நலமாகியதாகக் கூறியே சிறை அதிகாரிகளால் அவர் பொதுப் பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்தார்.

2011ஆம் ஆண்டு பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கில் தண்டனை பெற்ற துமிந்த சில்வா, 2021ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்சவினால் வழங்கப்பட்ட சர்ச்சைக்குரிய ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டார். அவருக்கான மன்னிப்பை இரத்துச் செய்த உயர் நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து அவர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கொலைக் குற்றவாளியுமான துமிந்த சில்வாவின் குடும்பத்துடன் தொடர்புடைய தொலைக்காட்சி என்ன செய்தி வெளியிட்டாலும் அவருக்கு மீண்டும் ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது என பிரதி நீதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க அண்மையில் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், "தொலைக்காட்சி சேவைகளுக்கு நாங்கள் பயப்படவில்லை. தம்பியை விடுவிக்க மாட்டோம்" என்றார்.

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கு ஆளும்தரப்புத் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும், துமிந்த சில்வாவை மேலும் வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டுமா என்பதை அறிய மருத்துவ விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர் கூறியிருந்தார்.

## ஈழ மீனவர்களினது வாழ்வுரிமை குறித்தும் சிந்தியுங்கள் ஸ்டாலின்

### மீனவர் சங்கப் பிரதிநிதி உருக்கம்

இந்திய இழுவைப் படகின் அட்டகாசத்தினால் எங்களால் எமது கடலில் தொழில் செய்ய முடியவில்லை. தமிழ்நாடு முதலமைச்சரே எமது மக்களின் வாழ்வுரிமையை பற்றியும் சற்று நீங்கள் சிந்தியுங்கள் என்று யாழ்ப்பாண மாவட்ட மீன்பிடி கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதி மகேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் யாழ்ப்பாணத்தில் உள்ள சம்மேளனத்தின் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தங்களுடைய மீனவர்கள் வாழ்வாதார நோக்கத்துக்காக எங்களுடைய கடல் எல்லைக்குள் ☞ 2

## இறக்குமதி வாகனங்களுக்கு 300 வீதம் வரை வரி விதிப்பு

எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள வாகனங்களுக்கான இறக்குமதி வரி வீதம் அதிவிசேட வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய உற்பத்தி திகதியிலிருந்து 10 வருடங்களுக்கு மேற்படாத வாகனங்களுக்கு 200 இலிருந்து 300 வீதம் வரை வரி விதிப்பதற்கு நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். ஒருசில வாகனங்களின் எஞ்சின் கொள்ளளவிற்கு அமைய வரி விதிக்கப்பட்டுள்ளது.

## இறக்குமதி வாகனங்களின் விலை 50% அதிகரிக்கும்

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலை எதிர்காலத்தில் 50 சதவீதம் வரை அதிகரிக்கக்கூடும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரெஞ்சிகே சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐந்து ஆண்டுகளாக இடைநிறுத்தப்பட்டிருந்த வாகன இறக்குமதியை மீண்டும் பெப்ரவரி மாதம் முதல் தொடங்க ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ள நிலையில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கான வரி வீதம் விசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது. இந்த வரி வீதங்களின்படி, இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலைகளும் வற் வரி நீங்கலாக, 15 முதல் 20 சதவீதம் வரை அதிகரிக்கக்கூடும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

குற்றஞ்சாட்டி வந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களின் விளைவாக முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலியரம்புக்வெல்லவும் உயர் அதிகாரிகள் 6பேரும்கைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில் நீண்ட நாட்களாக வைக்கப்பட்டிருந்தனர் என்பதெல்லாம் தெரிந்த கதைகள். இப்போது கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றொ-ரு அதிர்ச்சியூட்டும் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தக்காலப்பகுதியில்அதாவது2023ஆம் ஆண்டுஇறக்குமதிசெய்யப்பட்ட மருந்துகளில் 95 சதவீதமானவை தரக் கட்டுப்பாட்டுச் சோதனைகளுக்குஉட்படுத்தப்படவேயில்லை என்று கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை உறுதிப்படுத்துகின்றது. அந்த அறிக்கையின்படிதேசியமருந்துஒழுங்குமுறை ஆணையத்திடம் பதிவு செய்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மருந்துகளின் மாதிரிகளில் தொண்ணூற்றைந்து சதவீதம் 2023 ஆம் ஆண்டில் தேசிய மருந்து தர ஆராய்ச்சி ஆய்வகத்தில் சமர்ப்பிக்கப்படவேயில்லை.

மாதிரிப்பரிசோதனையின்றிமருந்துகளைப் பதிவு செய்வதால் தரமற்ற மருந்துகள் நாட்டுக்குள் நுழையும் அபாயம் உள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தரங்குறைந்த மருந்துகள் பற்றிய தகவல்கள் வெளியாகும் போது அவற்றில் கணிசமான அளவு மருந்துகளை நோயாளிகள் பயன்படுத்தியிருந்தனர் என்றும் தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

சுகாதாரச் சட்டத்தின் பிரிவு 59(4) (பி) மருந்துப் பதிவின் போது பொருந்தக்கூடிய சோதனைக்காக தேசிய மருந்து தரப் பாதுகாப்பு ஆய்வகத்தில் ஒரு மாதிரியைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று தெளிவாகக் கூறுகிறது என்பதையும் அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கின்றது. ஆனால் இந்தச் சட்டத்தின்படி எதுவும் நடக்கவில்லை.

மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் ஆவணங்களை மதிப்பீடு செய்யாமல், தலைமை நிர்வாக அதிகாரியின் ஒப்புதலின் பேரில் 287 பதிவு விலக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதாகவும் அறிக்கை கூறுகிறது.

95 சதவீதமான மருந்துகள் தரக்கட்டுப்பாட்டுச் சோதனைகள் இன்றி இறக்குமதி செய்யப்பட்டிருந்தால், அவற்றின் பின்னால்எவ்வளவுபணம்புகுந்துவிளையாடி இருக்கும் என்பதை உய்த்து உணர்வது எமது வாசர்களுக்கு ஒன்றும் சிரமமான காரியமல்ல.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## சிறீதரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் தின நிகழ்வில் பங்கேற்பதற்காக சென்னைக்குப் புறப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அதிகாரிகள் தடுத்து நிறுத்தி விசாரணை செய்த விவகாரம் தொடர்பிலேயே சிவஞானம் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்கு பயணத்தடை இருப்பதாகத் தெரிவித்த விமான நிலைய அதிகாரிகள் சுமார் இரண்டு மணி நேரமாக அவரைத் தடுத்து வைத்திருந்த பின்னரே செல்வதற்கு அனுமதித்தனர்.

"இராஜதந்திரகடவுச்சீட்டினைவைத்திருக்கும் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை இவ்வாறு நடத்தியதை ஏற்று கொள்ள முடியாது" என்று கண்டித்தார் கட்சித் தலைவர் சிவஞானம்.

சிறிதரன் இலங்கை தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்றகுழுத்தலைவராகஇருப்பதுடன் அவர் இலங்கை நாடாளுமன்றில் மூன்றாவது பெரிய கட்சியாக உள்ள இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் விளங்குகின்றார்.

இறுதியாக இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் தொடர்பாக அநுரவின் ஆளும்தரப்பைக் கடுமையாக விமர்சித்து உரையாற்றியும் இருந்தார். இந்நிலையிலேயே இவர் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் பயணிக்க அனுமதிக்கப்பட்டுள்ளார். எனவே இச் சம்பவம் ஒரு பழிவாங்கும் சம்பவமாக இருக்கலாம் என்ற சந்தேகமும் எமக்கு தோன்றுகிறது.

இனிமேலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அநுர ஆளும்தரப்புக்கு உண்டு -என்றார்.

## மோசடியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து மனுஷ நாணயக்காரவும் விரைவில் கைது செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவர் ஐ.தே.க. அலுவலகத்திற்கு வந்திருக்கிறார் எனக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழு ஒன்று அவரைத் தேடி பிற்பகல் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவுக்கு சென்றிருந்ததுஎன்றும்தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டில் இருக்கிறார் எனக் கூறப்பட்ட முன்னாள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, நாடு திரும்பி நேற்று காலை ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகத்திற்குச் சென்றார்.

தன் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து அங்கு செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த மனுஷ நாணயக்கார, தான் கைது செய்யப்படுவது குறித்து தனக்குப் பயம் இல்லை என்றும் கூறினார்.

தனது சகோதரர், தனது பெயரை விற்று மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்பதை ஒப்புக்கொண்ட அவர், தனது பெயரைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட வேறு சில நபர்களும் இருக்கின்றனர் எனவும் கூறினார்.

தான் அமைச்சராக இருந்தபோது ஆபத்தானவை என்று தெரிந்தே பல்வேறு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார் என்பதையும் ஒப்புக்கொண்டார். அதற்காக தனது அமைச்சு அதிகாரங்களைப் பயன்படுத்தியதாகவும் அவர் மேலும் கூறினார்.

## சிகரெட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலால் வரிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அதிவிசேட மதுபானத்துக்கு பயன்படுத்தப்படும் ஒரு லீற்றர் மதுசாரத்துக்கு 7244 ரூபாய் வரி விதிக்கப்பட்டுள்ளது. நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஒரு லீற்றர் மதுபானத்திற்கு, மொலேசஸ், பனை, தேங்காய் மற்றும் பதப்படுத்தப்பட்ட மதுபானத்துக்கு 7752 வரி விதிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உற்பத்திசெய்யப்படும் வெளிநாட்டு மதுபானங்களுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு லீற்றர் மதுசாரத்துக்கு 7969 ரூபாய் வரி விதிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 9 வகை மதுபானங்களுக்கு விதிக்கப்படும் வரிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் புதிய வரித் திருத்தங்களால், 3,580 ரூபாயாக இருந்த ஒரு போத்தல் அதி விசேஷ மதுபானத்தின் விலை 102 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 3850 ரூபாவாக இருந்த ஒரு போத்தல் தென்னஞ் சாராயத்தின் விலை 109 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், 4000 ரூபாயாக இருந்த பழைய மதுபானத்தின் விலை 109 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 4250 ரூபாவாக இருந்த அதிவிசேட பழைய மதுபானத்தின் விலை 109 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை சிகரட்டுக்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

4 கட்டங்களின் கீழ் சிகரெட்டுக்களின் விலைகள் 5 ரூபாவாலும், 10 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அ'புரம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னதாக விடுதிகளை விட்டு வெளியேறவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

புதிதாக இணைந்த பிக்கு மாணவர்களை பகிடிவதைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 19 பிக்கு மாணவர்களுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள வகுப்புத்தடையை நீக்குமாறு கோரி பல்கலைக்கழகத்தின் சில பிக்கு மாணவர்கள் பட்டினிப் போராட்டத்தைத் தொடக்கியதே இதற்குக் காரணம்.

நேற்று ஐந்தாவது நாளாகவும் இந்தப் பட்டினிப் போராட்டம் தொடர்ந்தது. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பிக்கு மாணவர்கள் பரீட்சைகளுக்குத் தோற்றவும் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

# பொலிஸ் சார்ஜன்ட் விபத்தில் இறப்பு

ஹங்கமவில் நேற்றிரவு 7:00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாந்தோட்டை பொலிஸில் கடமையாற்றிய ஆந்திரஹன்னடியைச் சேர்ந்த மஞ்சுள பிரியநாத் என்ற 54 வயதுடைய பொலிஸ் சார்ஜன்ட்டே உயிரிழந்துள்ளார். இவர் அம்பலாந்தோட்டை நோனகம பிரதேசத்தில் வசிப்பவர்.

பொலிஸ் சார்ஜன்ட் தனது மோட்டார் சைக்கிளில் ரன்னவிலிருந்து ஹங்கம நோக்கி பயணித்த போது ஹங்கமவில் இருந்து ரன்ன நோக்கி பயணித்த கெப் வண்டி மோதியதில் விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கெப் வண்டியின் சாரதி வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் மோட்டார் சைக்கிள் மீது மோதினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பொலிஸ் சார்ஜன்ட்டின் சடலம் ரன்ன கிராமிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்தை ஏற்படுத்திய வாகனச் சாரதி கைது செய்யப்பட்டடார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# சேவை நலன் பாராட்டு விழா

(கேதீஸ்)

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட தலவாக்கலை ட்றூப் பாடசாலையின் அதிபராக கடமையாற்றிய செல்லையா ஜெகதீஸ்வரன் தனது 35 வருட கல்வி சேவையிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றார்.

இவருக்கு பாடசாலை சமூகத்தினரால் சேவைநலன் பாராட்டு விழா நடத்தப்பட்டது.






நுவரெலியா கெலேகாலயை பிறப்பிடமாகவும் தலவாக்கலை நகரை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி மற்றும் உயர் கல்வியை நுவரெலியா பரிசுத்த திருத்துவ கல்லூரியில் கற்றார்.

1989 ஆம் ஆண்டு ஆசிரியர் தொழிலில் இணைந்துகொண்ட இவர் நுவரெலியா பரிசுத்த திருத்துவ கல்லூரியில் கடமையாற்றினார். பின்னர் 1993 ஆம் ஆண்டு கொட்டகலையதன்சைட் அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியை பெற்று ஆரம்ப பிரிவு பாட ஆசிரியரானார்.

நுவரெலியா பரிசுத்த திருத்துவ கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றிய இவர் 2000 ஆம் ஆண்டு தலவாக்கலை ட்றூப் தமிழ் மகா வித்தியாலயத்திற்கு ஆசிரியராக இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

அங்கு ஆசிரியராக கடமையாற்றிய இவர் இவர் 2005 ஆம் ஆண்டு அதே பாடசாலைக்கு கடமை நிறையேற்று அதிபராக நியமிக்கப்பட்டார்.

பின்னர் 2012 ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவையில் இணைந்துக்கொண்ட இவர் ஓய்வுபெறும் வரை அங்கு அதிபராக கடமையாற்றினார். இவர் நுவரெலியா கெலேகால பகுதியைச் சேர்ந்த செல்லையா தங்கம்மாள் தம்பதியினரின் புதல்வராவார்.

## 'ஏஐ' ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்கை நுண்ணறிவு தொடர்பில் தேசிய கொள்கையை உருவாக்குவதற்காக ஆளும்தரப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இதற்கான மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக மார்ச் மாதம் 14ஆம் திகதி வரையில் கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் செயற்கை நுண்ணறிவு குறித்த தேசியக் கொள்கையை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள குழுவானது, அவற்றை ஆராய்ந்து இறுதி வரைவினைத் தயாரிக்கும்.

இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதன் ஊடாக, நுண்ணறிவு மேம்பாடு மற்றும் டிஜிற்றல் பொருளாதாரத்தில் அதன் ஈடுபாடு மற்றும் எதிர்காலத்தில் முன்னோக்கிப் பயணிப்பதற்காக நாட்டின் அர்ப்பணிப்பு மிக்க உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதே நோக்கமாக உள்ளது என்றார்.

## ஈழ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்ததாகவும், அவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். பல வருடங்களாக இந்திய மீனவர்களைக் கைது செய்வதும் விடுவதும் தொடர்கதையாகவே காணப்படுகிறது.

அவர்கள் வாழ்வாதாரத்துக்காக கடலுக்கு வந்தால் நாங்கள் பொழுதுபோக்கிற்காக கடலுக்குச் செல்வதில்லை. நாங்களும் வாழ்வாதாரத்திற்காகத்தான் கடல் தொழிலுக்கு செல்கின்றோம்.

இந்திய இழுவைப்படகின் அட்டகாசத்தினால் எங்களால் எமது கடலில் தொழில் செய்ய முடியவில்லை. தமிழக முதலமைச்சரே எமது மக்களின் வாழ்வுரிமையை பற்றியும் சற்று நீங்கள் சிந்தியுங்கள்.

உங்களுடைய கடற்பகுதியில் பாகிஸ்தான் மீனவர்களோ அல்லது சீன மீனவர்களோ வந்து மீன்பிடியில் ஈடுபட்டால் அவர்களை வாழ்வாதார அடிப்படையிலோ அல்லது மனிதாபிமான அடிப்படையிலோ நீங்கள் விடுதலை செய்வீர்களா? நிச்சயம் நீங்கள் அவர்களை கைது செய்வீர்கள்.

இன்றைக்கும் உங்கள் எல்லையில் நீங்கள் சண்டை செய்துகொண்டுதான் இருக்கின்றீர்கள். அதுபோல எங்களது எல்லைக்குள் நீங்கள் வரவேண்டாம்.

எங்களது வளங்களை சுரண்டிக்கொண்டு, வாழ்வாதாரம் மனிதாபிமானம் என்று பொய்களை கூறிக்கொண்டு எங்களது மக்களை நிர்க்கதியாக்குகிறீர்கள்.

எனவே, உங்களது கடற்படையினை வைத்து உங்களுடைய மீனவர்களை எல்லை தாண்டவிடாமல் கட்டுப்படுத்துங்கள். எங்களது வளங்களை நாங்கள் பாதுகாத்துக்கொள்கிறோம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கனகபுரம் மாவீரர் துயிலும் இல்ல கட்டுப்பாடு யார் வசம் இருக்கும்?

## சிறீதரன் தரப்புக்கும் போராளிகள் நலன் பேண் தரப்புக்கும் முறுகல்







கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தை நிர்வகிப்பது யார் என்ற சர்ச்சையால் ஏற்பட்ட அமைதியின்மை சூழ்நிலையை பொலிஸார் தலையிட்டு கட்டுப்படுத்தினர்.

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்பதற்காக மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பக தரப்புகள் முனைந்தபோது இந்த அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் நினைவேந்தலுக்காக 2016 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பிரதான சுடரினை ஏற்றி, மாவீரர் குடும்பங்களும் சுடரேற்றியதையடுத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிலையில், அங்கு தொடர்ந்து 9 ஆண்டுகளாக நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தும் இந்த மாவீரர் துயிலும் இல்லம் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், கடந்த வருடம் பிரதான சுடர் ஏற்றுவதில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக துயிலுமில்ல நிர்வகிப்பு தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளது.

மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் எனும் அமைப்பு மாவீரர் துயிலும் இல்லங்கள் பொதுமயப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

நேற்று கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தின் நிர்வாகத் தெரிவை நடத்த அழைப்பு விடுத்திருந்தனர்.

இந்நிலையில், அப்பகுதிக்கு சென்றவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், தற்போது உள்ள நிர்வாகத் தரப்பே தொடர்ந்தும் செயற்பட வேண்டும் எனவலியுறுத்தினர்.

இதனையடுத்து, அப்பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது.

மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் அமைப்பினது அழைப்பின் பேரில் சென்ற மக்களுக்கு அவ்வேளை எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் அமைதியின்மை தொடர்ந்த நிலையில் கிளிநொச்சி பொலிஸார் அங்கு சென்றனர்.

அப்பகுதியில் கூட்டமாக நிற்க வேண்டாம் எனவும், பிரச்சினைகள் இருப்பின் பொலிஸில் முறைப்பாடு செய்யுங்கள் எனவும் தெரிவித்து அங்கிருந்த மக்களை வெளியேற்றினர்.

படிப்படியாக அங்கிருந்த மக்களை வெளியேற்றிய பொலிஸார் அமைதியின்மையைக் கட்டுப்படுத்தினர்.

இதேவேளை, குறித்த மாவீரர் துயிலுமில்ல வளாகத்துக்குள் அத்துமீறி செல்ல வேண்டாம் என்ற அறிவித்தல் போஸ்டரை கரைச்சி பிரதேசசபையினர் ஒட்டியிருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் முன்னாள் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சுப்பையா கூறுகையில், மக்களின் நினைவேந்தலை தடுக்கும் வகையிலும் நிகழ்ச்சிநிரல் ஒன்றின் அடிப்படையிலும் மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் எனும் அமைப்பு செயற்படுவதாக தெரிவித்தார்.

அதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதுவரை நடந்த நடைமுறைகளே பின்பற்றப்பட்டு நினைவேந்தல்கள் நடைபெறும். மக்கள் தெளிவாக செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் எனும் அமைப்பின் தலைவர் பார்த்திபன் தெரிவிக்கையில், மக்கள் மயப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை அமைக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இன்று சிறிதரனுடன் தொடர்புடைய சிலர் அங்கு குழப்பங்களை ஏற்படுத்தினர். நாகரிகமற்ற வார்த்தைகளை பேசினர். தொடர்ந்தும் சிறிதரனின் அரசியலுக்குள் துயிலும் இல்லங்களை அனுமதிக்க முடியாது.

சிறிதரன் தனது வாக்குக்காக கனகபுரம், முழங்காவில், தேராவில், சாட்டி ஆகிய துயிலுமில்லங்களை பயன்படுத்துகிறார். அரசியலுக்குள் சிக்கியுள்ள துயிலும் இல்லங்களை மக்கள்மயப்படுத்த வேண்டும். அதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

மாவீரர் துயிலும் இல்லங்களை அரசியல்மயப்படுத்தி, முன்னாள் போராளிகளுக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்துவது தொடர்பில் பலரும் அதிருப்தி வெளியிடுகின்றனர்.

# பஸ் விபத்து

(றிபாஸ்)

கொழும்பில் இருந்து பசறை நோக்கி சென்ற தனியார் பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் 13 பயணிகள் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சாரதிக்குஏற்பட்ட நித்திரை கலக்கம் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.





# விவசாயிகளுக்கு திருமலையில் ஒருநாள் பயிற்சி கருத்தமர்வு

(முபீன், அபு அலா)

திருகோணமலை - உப்புவெளி விவசாய விரிவாக்கள் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கு ஒருநாள் பயிற்சி விளக்க கருத்தரங்கு வியாழக்கிழமை மூன்றாம் கட்டை வர்த்தக சம்மேளன நிலையத்தில் இடம்பெற்றது.

விவசாயத்திணைக்கள போதனை ஆசிரியர் ஆர்.விவிஜன் தலைமையில் இடம்பெற்ற இப்பயிற்சிக் கருத்தரங்கிற்கு வளவாளராக திருகோணமலை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் விபேரின்பராஜா கலந்துகொண்டு விவசாயிகளுக்கான விளக்கத்தை வழங்கி வைத்தார்.

இலைமடிச்சி நோயால் பாதிக்கப்பட்ட பயிர்களை அதிலிருந்து எவ்வாறு பாதுகாப்பது, அதனை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்று தெளிவான விளக்கத்துடன் அப்பயிர்களை என்ன முறையில் கையாளலாம் என்றும் அதற்கு சிபாரிசு செய்யப்பட்ட இரசாயனங்களை எந்த நேரங்களில் பாவிக்க வேண்டும் என்று தொழில்நுட்ப ரீதியான ஆலோசனைகளையும் வழங்கி வைத்தார்.

இந்த ஒருநாள் கருத்தரங்கில் கண்ணியா, ஆண்டான்குளம், செம்பியன் ஆறு பிரதேசத்திலுள்ள விவசாயிகள் கலந்துகொண்டு





விவசாயம் சார்ந்த பிரச்சினைகளை தெரிவித்து அதற்கானதீர்வுகளையும் பெற்றுக்கொண்டனர்.

இதில் உப்புவெளி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்

திர்சானந்தன், பாடவிதான உத்தியோகத்தர் ஜேஜே.ஜஷாத் உள்ளிட்டோர் கலந்துகொண்டு விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கானதீர்வுகளையும் வழங்கிவைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

விலையில் மாற்றங்கள் இல்லை என்கிறார் யாழ். வணிகர் கழக தலைவர்

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ரணில், ராஜபக்சக்கள் பாதையிலேயே அநுரவும்

தமிழர்கள் விடயத்தில் ஐக்கிய நாடுகள் அவை மற்றும் உலக நாடுகளை ஏமாற்றும், சமாளிக்கும் இலங்கை ஆளும்தரப்பின் போக்கிலிருந்து தேசிய மக்கள் சக்தியும் கிஞ்சித்தும் விலகவில்லை என்பதை அதனது அண்மைக்கால நடவடிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன.

காணாமல்போனோர் அலுவலகம், தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றிற்கான பொறிமுறைகள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆளும்தரப்பு எடுக்கவுள்ளதாக தேசிய ஒருமைப்பாட்டிற்கான பிரதியமைச்சர் முனீர் முலாபிரின் அறிவிப்பு மற்றும் நல்லிணக்க செயற்பாட்டுக்கான வேலைத் திட்டத்தைத் தயாரிக்கவென சிறப்புக் குழு ஒன்றை நியமிப்பதற்கான ஆளும் தரப்பின் திட்டம் என்பவை எல்லாம் இந்த வகையிலானதாகவே படுகின்றது.

இதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த ராஜபக்சக்கள், ரணில் விக்கிரமசிங்கஎல்லோருமேஇதேபோன்றநடவடிக்கைகளைத்தான் இந்த விடயத்தில் மேற்கொண்டார்கள். உலக நாடுகளையும் ஐ.நாவையும் ஏமாற்ற கண்துடைப்பு நடவடிக்கைகளையே அவர்கள் எடுத்தார்கள். உண்மையான உளச்சுத்தியான நல்லிணக்க முயற்சிகளையோ நீதி விசாரணைகளையோ அவர்கள் எடுக்கவுமில்லை. எடுக்க முன்வரவுமில்லை. இதனாலேயே இனப்பிரச்சினை தீர்வு இன்றித் தொடர்ந்து வருகின்றது.

இவற்றுக்கு எல்லாம் மாற்றாக, ”முறைமை மாற்றமாக” செயற்படுவோம் என்று கூறிக்கொண்டு தமிழ், முஸ்லிம் மக்களதும் ஆதரவுடன் குறிப்பாக வடக்கு கிழக்கு மக்களின் ஆதரவுடனும் ஆட்சிக்கு வந்ததாகக் கூறிக்கொண்ட தேசிய மக்கள் சக்தியும் முன்னைய ஆடச் யாளர்களின் அதே ஏமாற்றுத் தனத்தையே பின்பற்றுவது கண்கூடாகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் மாசி மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், அதற்கு முன்பதாக நல்லிணக்க செயன்முறை தொடர்பான வேலைத்திட்டத்தைத் தயாரிப்பதற்கென விசேட குழுவொன்றை நியமித்து, அதுபற்றி ஜெனீவாவுக்கு அறிக்கையொன்றை அனுப்பிவைப்பதற்கு ஆளும்தரப்புத் திட்டமிட்டு வருவதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன என்று செய்திகள் வந்துள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடர் மாசி 24 தொடங்கி, ஏப்ரல் 4 வரை நடைபெறவுள்ளது. கடந்த செப்டெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் நடைபெற்ற வேளையிலேயே இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அநுரகுமார திசநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். அதனையடுத்து அவருக்குக் கால அவகாசம் வழங்கும் வகையில் இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் எனும் தலைப்பிலான தீர்மானம் வாக்கெடுப்பின்றி மேலும் ஒருவருடகாலத்துக்குக் காலநீடிப்பு செய்யப்பட்டது.

அதற்கிடையில் அடுத்த கூட்டத் தொடரில், தாம் முன்னெடுக்கவிருக்கும் நல்லிணக்க செயன்முறை தொடர்பான வேலைத்திட்டத்தைத் தயாரிப்பதற்கென ஒரு குழுவை ஆளும் தரப்பு நியமித்துள்ளதாகத் தெரிவித்து உலக நாடுகளை ஏமாற்ற ஆளும்தரப்புத் திட்டமிட்டுள்ளது. காலங் காலஙமாக இலங்கை ஆளும் தரப்புக்கள் செய்து வரும் இந்த ஏமாற்றுப் பாதையிலேயே தேசிய மக்கள் சக்தியும் பயணிப்பது. தமிழ் மக்கள் மத்தியில் அதன் மீதான நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் இழக்கச் செய்கின்றது.

# மூதூர் - மேன்காமம் குளத்தை புனரமைத்து நெல் உற்பத்தியை அதிகரிக்கக் கோரிக்கை

## விவசாயிகள்; வாழ்வாதாரம் குறித்தும் கவலை

மூதூர் - மேன்காமம் குளத்தை புனரமைப்பதன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மாத்திரமன்றி, நாட்டின் நெல் உற்பத்தியையும் அதிகரிக்க முடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மேன்காமம் கிராமத்தில் அமைந்துள்ள மேன்காமம் குளமானது இருநூறு வருடங்கள் பழைமை வாய்ந்ததும் சுமார் 600 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டதுமாகும். இதற்கு மகாவலி கங்கையினூடாக பாயும் நீரானது டி6 வாய்க்காலின் வழியாக குளத்தினுள் சேமித்து வைக்கப்பட்டு சுமார் 500 ஏக்கர் வயல்நிலங்களுக்கு இரு போகத்துக்கும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

ஆனால், தற்போது டி6 வாய்க்காலானது அத்துமீறி குளத்தினுள் வேளாண்மை செய்வோரால் அழிக்கப்பட்டிருப்பதால் குளத்துக்கு நீரைக் கொண்டுசெல்ல முடியாமல் இருப்பதுடன் குளத்தினுள் பற்றைக்காடுகளும் நீர்த்தாவரங்களும் வளர்ந்து, குளத்தின் ஆழம் குறைந்து காணப்படுவதாலும் நீரைத் தேக்கிவைத்து பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இக்குளத்தின் கரையோரப் பகுதிகளை சிலர் அத்துமீறி கையகப்படுத்தி வேளாண்மை செய்வதால் குளத்தில் நீரை தேக்கிவைக்க முடியாதுள்ளது. இதனால் நெற்பயிர்ச்செய்கையை ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டுவரும் 250 குடும்பங்களுக்கு மேற்பட்ட விவசாயிகள் வருடாவருடம் இரு போகச் செய்கையிலும் மிகுந்த நட்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதுமட்டுமன்றி, விவசாயிகள் தமது விவசாயத்துக்குத் தேவையான நீரை நேரடியாகவே பெற்று விவசாயப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நீர் தட்டுப்பாடான நேரங்களில் மகாவலி கங்கையின் அணைக்கட்டுக்குச் சென்று பலருடன் தகராறு செய்து, மண் மூடைகளை அடுக்கி நீரை திருப்ப வேண்டியுள்ளது. அதுமட்டுமன்றி, நீரை பகிர்ந்துகொள்வதில் விவசாயிகளுக்கிடையே முரண்பாடுகளும் ஏற்பட்டு வருகின்றன.

குளம் புனரமைக்கப்பட்டு அதனுள் போதியளவு நீர் தேக்கப்படுமாயின்,



குளப்பகுதியினுள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவது தடுக்கப்படும்.

அத்துடன், இது விவசாயிகளுக்கு மாத்திரமன்றி, மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்டவர்களுக்கும், கால்நடைகளை வளர்ப்பவர்களுக்கும் உதவியாக அமையும்.

எனவே, மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு குளத்தை அத்துமீறி கைப்பற்றியுள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து, ஆக்கிரமிப்பை நிரந்தரமாகத் தடைசெய்து, பல தசாப்த காலமாக புனரமைக்கப்படாமல் காணப்படும் குளத்தினை புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரியுள்ளனர்.

இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் கிராம மக்களின் வாழ்வாதாரம், நாட்டின் பொருளாதாரத்தினை மேம்படுத்த முடியும் எனவும், எதிர்வரும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்துமாறும் விவசாயிகள் உரிய தரப்பினரை கேட்டுக்கொண்டுள்ளனர்.



# அமைச்சுக்களின் ஆலோசனைக் குழு உறுப்பினராக றஜீவன் எம்.பி. நியமனம்

யாழ்ப்பாணம் மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லயன் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும்

சுற்றுலாத்துறை அமைச்சு, அபிவிருத்தி, சமூகப்பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்களின் ஆலோசனைக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.



# கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

(றிபாஸ்)

நற்பிட்டிமுனைஅல்கரீம்பௌண்டேஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நற்பிட்டிமுனை பிரதேசத்திலுள்ள சுமார் ஐம்பது மாணவர்களுக்கு மேற்படி கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வில் நிறுவனத்தின் தவிசாளரும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப் பணிப்பாளருமான சட்டத்தரணி சீ. எம்.ஹலீம் பிரதம அதிதியாகவும் பொதுச் செயலாளர் யூ.எல். எம்.பாயீஸ் விஷேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்,





# அம்பாறை மாவட்டத்தில் திறமைச் சித்தி பெற்று சட்டத்தரணியானார் ஒரே முஸ்லிம் பெண்மணி

(அபு அலா)

சிரேஷ்ட வைத்திய அதிகாரி வைத்தியர் இஸ்தீனின் துணைவி எல்.எல்.பி. பரீட்சையில் (ஏஎல்) திறமைத் சித்தி பெற்று சட்டத்தரணியானார்!

அம்பாறை மாவட்ட பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த முஹம்மது அப்துல் காதர் நிலுபா, திறந்த பல்கலைக்கழகத்தில் சட்ட இளமானிப் பட்டத்தைப் பெற்று அத்துடன் சட்டக் கல்லூரியில் நடைபெற்ற ஏஎல் பரிட்சையிலும் திறமைச் சித்தியடைந்து சட்டத்தரணியானார்.

அம்பாறை மாவட்டத்தில் (ஏஎல் ) திறமைத் சித்தி பெற்று சித்தியடைந்த ஒரேயொரு முஸ்லிம் பெண்மணி என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர், அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரியான சிரேஷ்ட வைத்தியர் சமூக செயற்பாட்டாளர் ஏ.எம்.எம்.இஸ்தீனின் துணைவியாவார்.





காலைக்கதிர் Kalaikkathir

# கொக்கொட்டிசோலை பொதுச் சந்தை பொதுமக்களின் பாவனைக்கு திறப்பு

கடந்த 4 வருடங்களுக்கு பின்பு புதிய அரசாங்கத்தால் கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தினுடாக கொக்கொட்டிசோலை பொதுச் சந்தை பொதுமக்களின் பாவனைக்காக சனிக்கிழமை மீண்டும் கையளிக்கப்பட்டது.

மன்முனை தென்மேற்கு பிரதேச சபையால் பராமரிக்கப்பட்டு வரும் இந்த கொக்கொட்டிசோலை பொதுச் சந்தையானது கடந்த நான்கு வருடங்களாக இயங்காத நிலையில் காணப்பட்டு வந்தது.

கொட்டும்மழையிலும்கிளீன் சிறிங்காவேலைத்திட்டத்தினுடாக புது வருடத்தை முன்னிட்டு இந்த பொதுச் சந்தை பொதுமக்களின் பாவனைக்காக மீண்டும் கையளிக்கப்பட்டது.

புதிய அரசாங்கத்தால் நாடளாவிய ரீதியில் கிளீன் சிறிலங்கா வேலை திட்டத்தினுடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனாதிபதியின் என்ன கருவுக்கமைய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும் திட்டத்தின் ஒரு கட்டமாக சீரற்ற கால நிலைக்கு மத்தியிலும் பொதுச் சந்தை பொதுமக்களின் பாவனைக்காக மீண்டும் கையளிக்கப்பட்டது .

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இப்பிரதேசத்தில் கடந்த பல வருடங்களாக நிரந்தரமான ஒரு பொதுச் சந்தை வசதி இன்றி மக்கள் மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர் இவ்விடயம் சம்பந்தமாக மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபுவின் கவனத்திற்கு பொது மக்கள் கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து தமிழர்களின் முக்கிய விழாக்களில் ஒன்றான தைப்பொங்கல் விழா போது தேவையான அத்தியாவசிய பொருள்களை மிகவும் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு வழங்கும்பொருட்டுபொதுச்சந்தைபொதுமக்களின்பாவனைக்காக மீண்டும் கையளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.





# 'சாவ்வேஷன் ஆர்மி' பிரதிநிதிகள் பிரதமர் ஹரினியுடன் சந்திப்பு

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவிற்கும், இரட்சிப்புப் படையின் (சால்வேஷன் ஆர்மியின்) சர்வதேசத் தலைவர்களான ஜெனரல் லிண்டன் பக்கிங்ஹாம் மற்றும் ஆணையர் பிரான்வின் பக்கிங்ஹாம்ஆகியோருக்கும்இடையிலானசந்திப்புநடைபெற்றது.

இந்தச் சந்திப்பு வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மீட்புப் படையின் தளபதி கேணல் நிஹால் ஹெட்டியாராச்சி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# 'தூய ஸ்ரீலங்கா' திட்ட நடைமுறை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

(ஹலால்தீன் )

'க்ளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுதொடர்பானவிழிப் புணர்வு நிகழ்ச்சியானது திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யு. ஜி. எம். ஹேமந்த குமார அவர்களின் தலைமையில் வெள்ளிக்கிழமை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ்விழிப்புணர்வு நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவி செயலாளர் அமோன் அவர்கள் கலந்து கொண்டு 'க்ளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் நோக்கம் மற்றும் மாற்றங்களை உருவாக்குதல் தொடர்பாக விளக்கமளித்தார்.

மேலும் சமூகம், சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறை ரீதியாக 'க்ளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் விளக்கமும்,

அரசாங்கத்தின்புதியஎண்ணக்கருக்களான வறுமையை ஒழித்தல், டிஜிற்றல் ஸ்ரீலங்கா, க்ளீன் ஸ்ரீலங்கா ஆகிய எண்ணக்கருக்களை எவ்வாறு செயற்படுத்தல் தொடர்பிலும்







பல விடயங்கள் தெளிவூட்டப்பட்டன.

அரசாங்க உத்தியோகத்தர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தக்க பதிலும் வழங்கப்பட்டது. 'க்ளீன் ஸ்ரீலங்கா' தொடர்பான காணொளியும் இதன்போது காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# இரு மாதங்களுக்குள் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற மந்திரக்கோல் இருக்கவேண்டும்

## ஐக்கிய காங்கிரஸ் ஜனாதிபதி மீது விமர்சனம்

(அஷ்ரப்கான்)

ஆட்சியமைத்து இரண்டு மாதங்களுக் கிடையில் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமாயின் ஜனாதிபதி அநுர குமாரவின் கையில் மந்திரக்கோல்தான் இருக்க வேண்டும் என்று ஐக்கிய காங்கிரஸ் கட்சி தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை விமர்சிப்பது தொடர்பில் தனது நிலைப் பாடு தொடர்பாக அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டை பொறுப்பேற்று கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஆகின்றது. அதற்கிடையில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என நாடாளுமன்றத்தில் இருப்போரும் வெளியில் இருக்கும் அவர்கள் கட்சிக்காரர்களும் புலம்பிக்கொண்டிருப்பதுநியாயமற்றதாகும்.

ஆட்சியமைத்து இரண்டு மாதங்களுக் கிடையில் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமாயின் ஜனாதிபதி அநுர குமாரவின் கையில் மந்திரக்கோல்தான் இருக்க வேண்டும்.

கோட்டாபய என்ற முட்டாள் பயலால் நாசமாக்கப்பட்ட நாட்டை ரணில் விக்ரமசிங்க ஓரளவு நிமிர்த்தினர். தனது இரண்டு வருட ஆட்சிக்காலத்தில் அவரால் முழுமையாக நாட்டை நிமிர்த்த முடியவில்லை என்பதைத்தான் அவரை மக்கள் தோற்கடித்ததன் மூலம் தெரிகிறது.

இந்த அரசின் தேர்தல் வாக்குறுதிகள் எங்கே என கேட்கும் அரசியல்வாதிகளை




பார்த்தால் அவர்களால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் மலைபோல் உள்ள நிலையில் அவர்கள் கேள்வி கேட்பது பொருத்தமற்றது.

முப்பது வருடங்களாக நாடாளுமன்றில் இருக்கும் ரவூப் ஹக்கீமும் அவரது கட்சியினரும் சமூகத்திற்கு கொடுக்காத வாக்குறுதிகளா? அதெல்லாம் அப்படித்தான், சும்மா நாங்களும் தேர்தல் காலத்தில் சொல்வோம், அதுவல்லாம் நடக்காது என்று தன் வாக்குறுதியை ஹக்கீமே கொச்சைப்படுத்தி ஜோக்கடித்ததை கண்டுள்ளோம்.

அதே போல் ரிசாத் பதியுதீன் கட்சியினரும் இருபது வருடங்களுக்கு மேலாக நாடாளுமன்றத்தில் இருந்தும் சமூகத்துக்கு கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

ஆகவே இந்த அரசாங்கத்துக்கு ஆக குறைந்தது ஒரு வருடமாவது நாம் சந்தர்ப்பத்தை கொடுத்து, விமர்சிப்பதை தவிர்க்க வேண்டும். அதற்கு முன் விழுந்தடித்துக்கொண்டு அரசை குழப்ப முன்வருவதை ஐக்கிய காங்கிரஸ் கட்சி கண்டிக்கிறது. - என்றார்.

# சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பணியகத்தில் போதைத் தடுப்பு நிகழ்ச்சி!

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில்கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கான போதைப் பொருள் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே.மதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபையின் வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான உளவள ஆலோசனை துறை இணைப்பாளர் எம்.எம்.ஜீ.வி.ரஸாத் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

இந்தநிகழ்வில்சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும்கலந்து கொண்டனர்.

போதைப் பொருள் பாவனைக்கு சமூகத்தில் அடிமையாகின்றவர்களின் மூலம் பல்வேறு இன்னல்கள் ஏற்படுவதாகவும் இதனை ஒழித்துகட்டுவதில்மிகப்பெரிய பங்குசுகாதாரத்துறையில்உள்ள குடும்பநல உத்தியோகத்தர்கள் கொண்டுள்ளனர் எனவும் இதன்போது வளவாளர் தெரிவித்தார்.

வீடுகளில்உள்ளதாய்மார்கள் மற்றும் பாதிக்கப்படுகின்ற பெண்களிடம் மிகவும் நெருக்கமான உறவை கொண்டு தொடர்புகளை மேற்கொள்ளக்கூடிய ஒரு தரப்பு சுகாதாரத் துறையில் உள்ளவர்களால் மட்டுமே மேற்கொள்ள முடியும்.

மேலும் இந்த நிகழ்வில் இணைப்பாளர்களாக சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோகத்தர்களான ரீ.எல். றிஸ்வானா, எஸ்.எப். றியானா, எஸ். விஜயலதா ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.





# ஹெரோயின் போதைப்பொருளுடன் யாழ்ப்பாணத்தில் இளைஞன் கைது

யாழ். நகரில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞன் நேற்று (சனிக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞனே யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் இருந்து 60 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. யாழில் நீண்டகாலத்தின் பின் கைப்பற்றப்பட்ட பெருந்தொகை ஹெரோயினாக இது கருதப்படுகிறது.



சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# படுகொலையாளிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும்போது தமிழ் மக்களுக்காக போராடியவர்களை ஏன் விடுவிக்கக்கூடாது?

## சிறிநேசன் காட்டத்துடன் கேள்வி

கடந்தஆட்சிக்காலத்தில்படுகொலை யாளிகள் கூட பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப் பட்டிருந்த நிலையில், தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடியவர்களை ஏன் விடுதலை செய்யக்கூடாது என மட்டக்களப்புமாவட்ட இலங்கைதமிழ் அரசுகட்சியின்நாடாளுமன்றஉறுப்பினர் ஞா.சிறிநேசன் கேள்வியெழுப்பினார்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் கையெழுத்துப் போராட்டம் நேற்று (சனிக்கிழமை) கிழக்கு மாகாணத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்த போராட்டமானது கிழக்கின் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும், புனர்வாழ்வு அளிக்கப்பட்டுசமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டுதடுத்துவைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

போராளிகள் நலன்புரி சங்கத்தால், அச்சங்கத்தின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் இ.செல்வநாதன் தலைமையில் இக்கையெழுத்துப் போராட்டம் நேற்று காலை மட்டக்களப்புபிரதானபஸ்நிலையத்தில் நடத்தப்பட்டது.

இதில் மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர் ஞா.சிறிநேசன்,முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர் பா.அரியநேத்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், மாவட்ட அமைப்பாளர் குககுமார், சிவில் சமூக செயற்பாட்டாளர் எஸ்.சிவயோகநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.




மழைக்குமத்தியிலும்பெருமளவான மக்கள் ஆர்வத்துடன் வருகைதந்து கையெழுத்துப் போராட்டத்தில் பங்குகொண்டமை முக்கிய விடயமாகிறது.

இதன்போது கருத்து தெரிவித்த சிறிநேசன் -

பல ஆண்டுகளாக சிறையில் வாடிக்கொண்டிருக்கின்ற, எமது விடுதலைக்காக போராடிய தமிழ் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்கிற அறவழிப் போராட்டத்தை தற்போது முன்னெடுத்திருக்கின்றனர்.

பயங்கரவாத தடைச் சட்டம் எனும் பெயரில் மிக மோசமான, மனித குலத்துக்கு எதிரான சட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இதன் மூலம் அப்பாவிகளை கூட பயங்கரவாதிகள் என்ற பார்வைக்கு உட்படுத்தப்படும் மிக மோசமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது.

தற்போது ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இந்த சட்டத்தை நீக்குவோம் என்னும் உத்தரவாதத்தை அளித்தும் கூட இன்னும் அந்த பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவில்லை.

இந்நிலையில் இந்த கொடிய பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் எமது பத்து தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் விரைவாக விடுதலை செய்யப்படவேண்டும். இவர்கள் நீண்டகாலமாக சிறைச்சாலையில் நாள்களை கழித்துவிட்டார்கள். இருக்கும் காலத்திலாவது தமது உறவுகளுடன் இணைந்து வாழ்வதற்கு மாற்றத்தை உருவாக்கப்போவதாகக் கூறும் புதிய அரசாங்கம் அதனை செய்யவேண்டும். - என்றார்.

# பெண்கள் வாழ்வுரிமைச் சங்க 07ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு

பெண்கள் வாழ்வுரிமைச்சங்கத்தின் 07 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும் வருடார்ந்த பொதுக்கூட்டமும் தனியார் விருந்தகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட பெண்கள்அபிவிருத்திஉத்தியோகத்தர் செல்வி உதயனி நவரத்தினம், சிறப்பு விருந்தினராக காவேரிக்கலா மன்றத்தின் பணிப்பாளர் அருட்தந்தை யோசுவா கலந்து கொண்டனர்.

குறித்தநிகழ்வில்பெண்கள்வாழ்வுரிமைச்சங்க உத்தியோகத்தர்கள்,சிறுகுழுக்களைச்சேர்ந்தோர் என பலர் கலந்து கொண்டனர்.கேக் வெட்டி



ஆண்டு நிறைவு கொண்டாடப்பட்டது. குறித்த நிகழ்வில் சிறு தொழில் முயற்சியாளர்களும் கௌரவிக்கப்பட்டனர். 113




# வடக்கு மாகாணத்தின் முக்கிய சொத்து கல்வி



## வட மாகாண ஆளுநர் எடுத்துரைப்பு

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் சில துறைகளை உயர்கல்விக்காக தேர்ந்தெடுக்காமையால் இங்குள்ள வெற்றிடங்களுக்கு வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர்களை நியமிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

யாழ். உயர்கல்விக் கண்காட்சி - 2025 திறப்பு விழா நேற்று (சனிக்கிழமை) காலைவலம்புரிஹோட்டலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன் மற்றும் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோர் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர்.

இங்கு உரையாற்றிய ஆளுநர், முன்னைய காலத்தில் இலங்கையின் அரசபல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் குறிப்பிட்ட தொகையானவர்களுக்கு மாத்திரமே உயர்கல்விக்கான வாய்ப்பு இருந்ததாகவும் இன்று அந்த நிலைமை மாறியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தற்போது அரச பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்காத மாணவர்களும் உயர்கல்வியைக் கற்பதற்கான வாய்ப்பு பரந்தளவில் கிடைப்பதாகவும் தெரிவித்த ஆளுநர் அதனைச் சரிவரப் பயன்படுத்தவேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் எமது முயற்சி மற்றும் தேடலில்தான்உயர்கல்வித்தெரிவுஇருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், பொருத்தமானதுறைகளை தெரிவு செய்வதன் ஊடாக வேலை வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

வடக்குமாகாணத்தின்முக்கியசொத்துகல்வி என்பதைக் குறிப்பிட்ட ஆளுநர், இவ்வாறான கல்விக் கண்காட்சிகள் எமது மாகாண மாணவர்களின்எதிர்காலத்துக்குசிறப்பானவை என்றும் இவை தொடரவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.



# இலங்கைக்குச் சுற்றுலா வந்துள்ளார் பிரேசில் முன்னாள் கால்பந்து நட்சத்திரம்

பிரேசிலின் முன்னாள் கால்பந்து நட்சத்திர வீரர் ரொனால்டோ நசாரியோ விடுமுறையை கழிக்க இலங்கைக்கு குடும்பத்தோடு சுற்றுலா வந்துள்ளார்.

இந்நிலையில், அவர் உடவளவ தேசிய பூங்காவிற்கு சென்று சவாரியில் ஈடுபடும் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது.

அத்தோடு, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமான சேவையும் ரொனால்டோ இலங்கைக்கு வருகைதந்த புகைப்படங்களைபகிர்ந்திருந்தது.

அதில், 'பிரேசிலின் முன்னாள் தொழில்முறை கால்பந்துவீரர் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் உடன் ஒரு வசதியானபயணத்தில்இணைந்துகொண்டார்' என விமான சேவை தெரிவித்துள்ளது.

ஆர் 9 என அன்புடன் அழைக்கப்படும் ரொனால்டோ சிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவராக கருதப்படுகிறார். மூன்று பைவா விருதுகள் மற்றும் இரண்டு பலோன் டி-ஓர் பட்டங்களை பெற்றுள்ளார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.01.2025இல் வெளியிடப்பெற்றது